செ.வெ.எண் -22 நாள்:10.10.2020

# அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு.

அரியலூர் மாவட்டம், அரியலூர் ஒன்றியத்திற்குட்பட்ட முனியங்குறிச்சி, வெளிப்பிரிங்கியம் ஆகிய பகுதிகளில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (10.10.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

அரியலூர் - விக்கிரமங்கலம் சாலையிலிருந்து முனியங்குறிச்சி செல்லும் சாலையில் ரூ.14.37 இலட்சம் மதிப்பீட்டில் பாலம் மற்றும் அனுகு சாலை அமைக்கும் பணிகளை நேரில் பார்வையிட்டு, பணிகள் குறித்து தரம் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார்கள்.

பின்னர், வெளிப்பிரிங்கியம் கிராமத்தில் உள்ள அரசு நடுநிலைப்பள்ளியில் ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கூடுதல் வகுப்பறை கட்டிடத்தினையும், ரூ.9.8 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் அங்கன்வாடி கட்டடிடத்தினையும் பார்வையிட்டு, பள்ளி வளாகத்தை சுற்றிள்ள சுற்றுச்சுவர்களை சீரமைப்பதற்கு சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கி, நிதி ஒதுக்கீடு செய்து சீரமைப்பதற்கு அறிவுறுத்தினார்கள். தொடர்ந்து, மயான பகுதிகளில் ரூ.6.15 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் தடுப்பணையினை பார்வையிட்டு, விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர சம்மந்தபட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வின்போது, திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நாராயணன், தமிழரசன் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**